
தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில், சட்டமன்ற உறுப்பினரும், கழக தலைமைச் செயற்குழு உறுப்பினருமான சபா. இராசேந்திரன் குடும்பத்தினருடன் சந்தித்து, தனது மகன் சபா.இரா. சுமந்த் திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார். உடன் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சரும் கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளருமான சி.வி. கணேசன், திருமதி.துர்கா ஸ்டாலின் உள்ளிட்டோர் உடன் உள்ளார்.


கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சித் தலைவர் – குன்றத்தூர் தெற்கு ஒன்றியச் செயலாளர் படப்பை ஆ.மனோகரன் – சரஸ்வதி மனோகரன் ஆகியோரது புதல்வர் ம.வெற்றிச்செல்வன் – ஜோ.ஜெசீக்கா ஏஞ்சலின் ஆகியோரின் மணவிழா வரவேற்பில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். இதில் மாவட்டச் செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன், இ.கருணாநிதி எம்.எல்.ஏ., கு.செல்வப் பெருந்தகை எம்.எல்.ஏ. மற்றும் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

# நீதிமன்றங்களில் அண்ணல் அம்பேத்கர் புகைப்படம் அகற்றப்படக்கூடாது!

## தமிழ்நாடு அரசின் நிலைப்பாடு ஏற்பு!

சென்னை, ஜூலை 26- நீதிமன்றங்களில் அண்ணல் அம்பேத்கர் புகைப்படம் அகற்றப்படும் என்ற செய்தி பரவியதைத்தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்கள் மெட்ராஸ் உயர்நீதிமன்றத் தலைமை நீதிபதி நீதியரசர் சஞ்சய் விஜயகுமார் கங்காபூர்வாலா அவர்களைச் சந்தித்து இது குறித்து ஆலோசனை மேற்கொண்டார்.

தலைமை நீதிபதி அவர்களிடம் அண்ணல் அம்பேத்கர் புகைப்படம் அகற்றப்படக்கூடாது என்ற தமிழ்நாடு அரசின் நிலைப்பாட்டினை சட்டத்துறை அமைச்சர் கடிதம் வழங்கி நேரில் தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசின் நிலைப்பாட்டைக் கேட்டறிந்த தலைமை நீதிபதி அவர்கள், நீதிமன்றங்களில் எந்த தலைவர்களின் புகைப்படத்தையும் அகற்ற உத்தரவிடப்படவில்லை. தற்போது உள்ள நடைமுறையே தொடரும் (Status Quo to be contin ued) எனத் தெரிவித்தார்.

இத்தகவல் வழக்கறிஞர் மன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.




## கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு

# “நவீன தமிழ்நாட்டின் சிற்பி - கலைஞர்” - குழுக் கூட்டம்!

## அமைச்சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது!

சென்னை, ஜூலை 26 - கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு “நவீன தமிழ்நாட்டின் சிற்பி கலைஞர்“ குழுக்கூட்டம், பொதுப்பணிகள், நெடுஞ் சாலைகள் மற்றும் சிறுது றைமுகங்கள் துறை அமைச் சர் எ.வ.வேலு தலைமையில் நடைபெற்றது.

இது குறித்து அரசு வெளி யிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு :-

சென்னை தலைமைச் செயலக வளாகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகை கூட்டரங்கில், நேற்று முன் தினம் (24.7.2023) காலை 10.30 மணியளவில் கலை ஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு “நவீன தமிழ் நாட்டின் சிற்பி கலைஞர்“ குழுக்கூட்டம் இக்குழுவின் தலைவர், பொதுப்பணி கள், நெடுஞ்சாலைகள் மற் றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு தலைமையிலும், இக்குழு வின் இணைத் தலைவர்கள் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் ஆர்.எஸ். ராஜகண்ணப்பன், வணிக வரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி ஆகி யோர் முன்னிலையிலும் நடைபெற்றது.

இக்ழுவின் உறுப்பினர் - செயலர், பொதுப்பணித் துறை அரசு முதன்மைச் செயலாளர் டாக்டர் பி.சந் திரமோகன், வரவேற்புரை ஆற்றிய பின், இக்குழுக் கூட்டத்தை துவக்கி வைத்து அமைச்சர் எ.வ.வேலு உரையாற்றுகையில்,

விவசாயத்தில் ‘முன் னணி மாநிலம், மருத்துவச் சேவைகள் வழங்குவதில் முன்னணி மாநிலம், உயர் கல்வியில் முன்னணி மாநி லம், தொழில் வளர்ச்சியில் முன்னணி மாநிலம், தகவல் தொழில்நுட்பத் தொழில் வளர்ச்சியில் முன்னணி மாநிலம், சட்டம் ஒழுங் கைக் காப்பதில் முன்னணி மாநிலம், அத்தியாவசியப் பொருட்களை வழங்கி வறுமையை தீர்த்ததில் முன்னணி மாநிலம், சாதி, மதவேறுபாடுகள் நீங்கிட இடஒதுக்கீடுகள் தந்து, சமத்துவசமுதாயம் படைப் பதில் முன்னணி மாநிலம், விவசாயிகளுக்கு இலவச மின்சாரம் வழங்கி, விவ சாய உற்பத்திகள் பெருக, வழிவகுத்ததில் முன்னணி மாநிலமாக உள்ளது .

இந்தியாவிலேயே பணக் கார மாநிலமான மகா ராஷ்ட்ராவிலும், மேற்கு வங்காளத்திலும்கூட உணவு உற்பத்தி இல்லாததால், பஞ்சம் ஏற்பட்டது. முத்தமி ழறிஞர் கலைஞர் அவர்கள், “IR8“ என்று நெல் வகை யினை அறிமுகப்படுத்தி, ஏக் கருக்கு 45 மூட்டைகள் நெல் உற்பத்தி செய்யக்கூடிய நிலையை உருவாக்கியதால், தமிழ்நாட்டில் உணவு பஞ் சம் ஏற்படவில்லை எனத் தெரிவித்தார்.

### குடிசைப் பகுதிகள் இல்லா தமிழகம்!

குடிசைப் பகுதிகள் இல்லா தமிழகம் எனக் கொள்கை வகுத்தவர் கலை ஞர், தமிழ்நாட்டில், கட் டட வடிவமைப்பில் நவீ னங்களை புகுத்தியவர் கலைஞர், தலைமைச் செய லகத்தில், நாமக்கல் கவிஞர் மாளிகை கட்டடம், மாவட்ட ஆட்சியர் அலுவ லகக் கட்டடங்கள், ஒருங்கி ணைந்த நீதிமன்ற வளாகங் கள் போன்றவைகளே சாட்சிகள் ஆகும்.

1971 இல், முதன் முத லாக, சிப்காட் தொழில் வளாகங்களை ஏற்படுத்தி, 1997இல், தமிழ்நாட்டில் கார் தொழிற்சாலைகளை உருவாக்கி. “சென்னை இந் தியாவின் டெட்ராய்ட்“ எனப் புகழ்பெற செய்தவர் கலைஞர், நெடுஞ்சாலைத் துறையை நவீனமயம் ஆக்கி யவர் கலைஞர், தமிழ்நாட் டில் முதன் முதலில் மேம்பாலங்கள் அமைத்து நெடுஞ்சாலையை நவீனப் படுத்தியவர் கலைஞர். 1973 ஜூலை 1இல், சென்னை, அண்ணா மேம் பாலம் திறக்கப்பட்டது.

தகவல் தொழில்நுட்பக் கொள்கையை முதன் முதல் உருவாக்கி, தமிழ்நாட்டு இளைஞர்கள், ஐ.டி. தொழி லில் ஆதிக்கம் செலுத்தும் நிலையை ஏற்படுத்தியவர் கலைஞர். இந்தியாவிலேயே முதன்முதலாக 1969இல், காவல் ஆணையம் அமைத்த வர் கலைஞர். 1989இல், மாவட்டத்திற்கு ஒரு அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவக்கல்லூரி மருத்துவ மனைகள் என கொள்கை வகுத்தவர் கலைஞர். 1999இல், “தமிழ்நெட்“ என கணினி மாநாடு நடத்தி, தமிழை கணினியில் இடம் பெறச் செய்தவர் கலைஞர்.

“கலைஞர் கைபடாத கலையில்லை,

கலைஞர் கைபட வில்லை என்றால்;

அது கலையே இல்லை!.

என்று சொல்லக்கூடிய வகையில் அனைத்தையும் நவீன மயமாக்கிய சிற்பி கலைஞர் என்று அறுதியிட் டுக் கூறலாம்.

இவ்வாறு அவர் கூறினார்.

### கலைஞர் காலத்து கட்டடப் பணிகள்!

அமைச்சரின் உரையை தொடர்ந்து, இக்குழுவின் பல்வேறு உறுப்பினர்கள் அவரவர்களின் கருத்து களைத் தெரிவித்தார்கள்.

நீண்ட விவாதத்திற்குப் பின்னர் கீழ்க்கண்ட முடிவு கள் மேற்கொள்ளப் ப ட்டன.

1. முத்தமிழறிஞர் கலை ஞர் முதலமைச்சராகவும் மற்றும் பொதுப் பணித் துறை அமைச்சராகவும் பொறுப்பேற்றிருந்த காலத் தில் கட்டப்பட்ட முக்கி யமான கட்டடங்கள் மற் றும் கட்டமைப்பு வசதிகள் (Iconic buildings and Infrastruc ture) ஆகியவற்றின் நோக் கம் மற்றும் பயன்பாடு போன்ற விவரங்களுடன் தொகுத்து ஆவணப்படுத்து தல், டிஜிட்டல் ஆவணம் உருவாக்குதல்.

2. முத்தமிழறிஞர் கலைஞர் முதலமைச்சராகவும் மற் றும் பொதுப்பணித்துறை அமைச்சராகவும் பொறுப் பேற்றிருந்த காலத்தில் கட் டப்பட்ட 100 கட்டடங்க ளில் புனரமைப்பு மற்றும் சீரமைக்கும் பணிகளை மேற்கொள்ளுதல். இப்ப ணிகளுக்கான கால அளவு மற்றும் நிதித் தேவையினை நிர்ணயம் செய்தல்.

3. கலைஞர் காலத்து கட் டடப் பணிகள் குறித்த சாத னைகளை விளக்கிக்கூறும் கூட்டங்கள் / விழாக்கள், குறும்படம் வெளியிடுதல்.

4. மிக முக்கிய கட்டடங் களில் (land mark buildings) மின் ஒளி விளக்கு அலங்கா ரம் செய்தல்.

5. முத்தமிழறிஞர் கலை ஞர் அவர்களால் திறந்து வைக்கப்பட்ட கட்டடங்க ளில் உள்ள கல்வெட்டு களை சீரமைத்தல்.

6. கலைஞர் நூற்றாண்டு விழா சார்ந்த கருத்தரங்கம் மற்றும் பயிற்சிகள்

7. கலைஞர் நூற்றாண்டு விழாக்காலமான ஜூன் 2023 முதல் ஜூன் 2024 வரையிலான காலத்தில் முதலமைச்சர் அவர்களால் அடிக்கல் நாட்டப்படும் மற் றும் திறந்து வைக்கப்படும் முக்கிய கட்டடங்களின் நோக்கம் மற்றும் பயன் பாட்டினை விளக்கும் குறும் படங்களை, பொது இடங்கள் மற்றும் திரை அரங்குகள் போன்றவற்றில் ஒளி பரப்பு செய்து மக்கள் அறியச் செய்தல் போன்ற முடிவுகள் எடுக்கப்பட்டன.

இக்குழுவின் உறுப்பினர் கள் அவர்களுடைய கருத்து களை அவ்வப்போது தெரி விக்கும்படி கேட்டுக் கொண்டார்கள்.

இக்குழுக் கூட்டத்தில், இக்ழுவின் உறுப்பினர்க ளான முனைவர் இராம சீனிவாசன், முனைவர் ஜோதி சிவஞானம், திருமதி ரூப்மதி, ஓவியர் மருது, கவி ஞர் ஏர்வாடி எஸ்.ராதா கிருஷ்ணன், ஸ்தபதி செல்வ நாதன் ஆகியோர் பங்கு பெற்றார்கள்.



சென்னை வடக்கு மாவட்டக் கழகம் ஏற்பாட்டில் தி.மு.கழகம் பிறந்த ராயபுரம் பகுதியில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவில், கழகத்தின் மூத்த உடன்பிறப்புகள் 500 பேருக்கு தலா 10,000 ரூபாய் பொற்கிழி வழங்கியும் மேலும், 500 மாணவ– மாணவியருக்கு கல்வி உதவித்தொகை, 250 விளையாட்டு வீரர் – வீராங்கனையருக்கு விளையாட்டு உபகரணங்கள், 250 தூய்மைப் பணியாளர்கள் மற்றும் 50 மகளிர் சுய உதவிக்குழுக்களைச் சேர்ந்த 500 சகோதரிகள் உட்பட மொத்தம் 2000 பேருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். உடன் அமைச்சர்கள் பி.கே.சேகர்பாபு, அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மாவட்டச் செயலாளர் தா.இளைய அருணா, டாக்டர் கலாநிதி வீராசாமி எம்.பி., சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், ஐட்ரீம் மூர்த்தி, ஜெ.ஜெ.எபினேசர் உள்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்.